# 19ம் நூற்றாண்டில் இந்திய சமூகத்தை நவீனமயப்படுத்துவதில் ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் ஆகியோர் வழங்கிய பங்களிப்புகளும் சமகாலப்பிரச்சினைகளுக்கான அதன் பொருத்தப்பாடும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**கோ. தர்ஷிகா[286], ஆ. நரேன்[287] & எம்.எஸ்.எம். அனஸ்[288]**

Correspondence: tharsigapackijanathan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன இந்தியாவில் ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் ஆகியோரின் வாழ்வும் சிந்தனையும் தற்போதைய இந்திய சந்ததியின் வெற்றிக்கு தாக்கம் செலுத்துவதாகவும் வாழ்வினை நகர்திச் செல்வதற்கும் அடிப்படையாகின்றது.

இந்திய சமூகம் ஓர் பன்மைத்துவ சமூகமாகும். குறிப்பாக இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட பல சமய இன மதங்கள் வாழும் சமூகமாகும். இந்த பின்னணியில் நவீனத்துவ சிந்தனைகளையும் சமய சமூக கல்விசார் சீர்திருத்தங்களையும் மேற்கொள்ளும் போது பல சவால்கள் எழுவது இயல்பு. ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் போன்றவர்கள் இப்பிரச்சினைகளை எவ்வாறு கையாண்டார்கள் என்றும் அப்போது முன்வைக்கப்பட்ட சிந்தனைகளும் செயற்பாடுகளும் என்ன என்பது பற்றி ஒப்பீட்டு ரீதியிலும் இதன் மூலம் நவீன உலககிற்கும் இலங்கை போன்ற அதன் அயல் நாடுகளுக்கும் அவர்களால் முன்வைக்கப்பட்ட செய்தி என்ன என்பது பற்றியும் இங்கு ஆராயப்படுகிறது. ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் ஆகியோரின் சமய, சமூக, கல்வி ரீதியான சீர்திருத்த சிந்தனைகள் நவீன இந்திய சந்ததியின் வெற்றிக்கும் இலங்கை போன்ற அயல்நாடுகளின் வெற்றிக்கும் தாக்கம் செலுத்துகிறது என்கின்ற கருதுகோளினை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு நகர்த்திச் செல்லப்படுகிறது. இவ் இருவருடைய சமய, சமூக, கல்வி தொடர்பான சீர்திருத்த சிந்தனைகளிடைய காணப்படும் ஒப்பீட்டு தன்மையினை ஆராய்வதுடன் 19ம் நூற்றாண்டில் இந்திய சூழலில் அவர்கள் முன்வைத்த கருத்துக்களும் சிந்தனைகளும் சமகால பிரச்சினைகளையும் இன சமூக மோதல்களையும் தீர்ப்பதற்கு உதவும் விதத்தினை வெளிக் கொணர்தவதனையும் பிரதான நோக்கமாகக் கொண்டு காணப்படுகிறது. இங்கு ஆய்வு முறையியல்களாக வரலாற்று ஆய்வு, பகுப்பாய்வு, ஒப்பீட்டாய்வு, விபரண ஆய்வு போன்ற ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ் ஆய்வுக்கு தேவையான தரவுகள் இரண்டாம் நிலைதரவுகள் ஊடாக திரட்டப்பட்டு பண்பளவு ரீதியாக ஆய்வு செய்யப்படுகின்றது.

**பிரதான சொற்கள்:** நவீன மயப்படுத்துதல், சமூக சமய சீர்திருத்தங்கள், பன்மைத்துவ சமூகம், கல்வி வளர்ச்சி

## ஆய்வு அறிமுகம்

இந்திய மெய்யியலானது மனிதனது அகநிலைத்தன்மை வழி பிரபஞ்ச ஆன்மீகத்தை நாடுவதாக அமைகிறது. இவ்வகையில் இந்திய மெய்யியற் சிந்தனைகள் சமயத்தில் இருந்து பிரித்துவிட முடியாத படி சமயத்தோடு பின்னிப்பிணைந்ததாகக் காணப்பட்டபோதும் சமகால இந்திய மெய்யியற் சிந்தனையாளர்கள் சமய, சமூக, கல்வி சார் சீர்திருத்தங்களில் அதிக கவனத்தினை செலுத்தினர்[ⅲ].

பிரித்தானிய ஆட்சியானது இந்தியாவிலே ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் இந்தியாவின் ஒட்டு மொத்த தோற்றம் சீர்குலைந்தும் சிதைந்த நிலையிலும் காணப்பட்டது. சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் கல்விச் செயற்பாடுகள் நாட்டில் சரிந்தும் அழிந்தும் தேக்கமடைந்தும்

[286] Department of Philoshophy, University of Jaffna, Sri Lanka.
[287] Department of Philoshopy, University of Peradeniya, Sri Lanka.
[288] Department of Philoshopy, University of Peradeniya, Sri Lanka.

கொண்டது[ix]. இரவீந்திரநாத் தாகூரின் வார்த்தைக்கமைய "அவளது வாழ்வு இறந்த நிலையில் காணப்பட்டதோடு அனைத்து வழக்கங்களையும் மறந்தும் மறக்கப்பட்டும் காணப்படுவதை அது வெளிப்படுத்துகின்றது". மூட நம்பிக்கைகளும் பாரபட்சங்களும் அறியாமை மற்றும் பகைமைகள், கசப்புணர்வுகளும் பாகுபாடுகளும், நியாயமற்ற விலக்கங்கள் உலகம் முழுவதிலும் ஏற்பட்டது[x]. இந்த வகையில் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒரு புறமிருக்க மறுபுறத்தில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் முரண்பாடுகள் மேலோங்கி வருவதுடன் மொழி ரீதியான மோதல்களும் வலுவடைந்துள்ளது.

இந்த வகையில் இந்தியாவில் காணப்படுகின்ற பெரும் மதங்களான இந்து, இஸ்லாம் மதங்களின் அடிப்படையில் ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் போன்றோர் 19ம் நூற்றாண்டில் இந்திய சமூகத்தை நவீனமயப்படுத்துவதில் வழங்கிய பங்களிப்புகளை ஓர் ஒப்பீட்டு ரீதியில் ஆய்வு செய்வதாக இது அமைகிறது.

இந்தியாவில், நவீனத்துவம் என்பது அவ்விருவரையும் பொறுத்தவரையில் இன, மத வேறுபாடுகளற்ற ஐக்கிய இந்தியா என்பதே ஆகும்.

**ஆய்வின் நோக்கம்**

பிரதான நோக்கம்

- இன ஐக்கியத்திற்கும் கல்வி மேம்பாட்டிற்கும் ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் ஆகியோர் வழங்கிய பங்களிப்புகளின் முக்கியத்துவத்தினை வெளிக் கொணர்தல்.
- 19ம் நூற்றாண்டில் இந்திய சூழலில் அவர்கள் முன்வைத்த கருத்துக்களும் சிந்தனைகளும் சமகால பிரச்சினைகளையும் இன, சமூக மோதல்களையும் தீர்ப்பதற்கு உதவும் விதத்தினை வெளிக் கொணர்தல்.

துணை நோக்கம்.

- இருவருடைய சமய, சமூக, கல்வி தொடர்பான சீர்திருத்த சிந்தனைகளிடைய காணப்படும் ஒப்பீட்டு தன்மையினை ஆராய்தல்
- தற்போதைய சமுதாயத்திற்கு இவ் இருவரது சிந்தனை மற்றும் செயற்பாடுகளின் ஊடாக நாம் முன்வைக்கும் புதிய செய்தியினை தெளிவுபடுத்துதல்.

**ஆய்வின் கருதுகோள்**

- ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் ஆகியோரின் சமய, சமூக, கல்வி ரீதியான சீர்திருத்த சிந்தனைகள் நவீன இந்திய சந்ததியின் வெற்றிக்கும் இலங்கை போன்ற அயல் நாடுகளின் வெற்றிக்கும் தாக்கம் செலுத்துகிறது.

**இலக்கிய மீளாய்வு**

Aisharya De (2016), "Social Contributions of Raja Rammohan Roy: Prsent Perspective" என்ற ஆய்வில் மோகன் ராயினுடைய சமய சமூக நிலைப்பாடுகள் பற்றியும் சமூக சமயத் தத்துவங்களில் வேறுபட்ட அம்சங்களை விளக்குவதாகவும் இவரது செயற்பாடுகளும் பங்களிப்புகளும் தற்காலத்தில் எவ்வாறு பொருத்தமாகிறது என்பது தொடர்பிலான ஆய்வாக அமைகின்றது.

Madan Mohan Mendal & Santosh Kumar Behera (2015) "Raja Ram Mohan Roy as an educational Reformer : An Evaluation என்ற ஆய்வில் மோகன் ராய் நவீன இந்தியாவினை வடிவமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உத்தி பற்றி ஆராயப்படுகிறது. அத்துன் சமூக சமய

மறுமலர்ச்சி இயக்கமான பிரம்ம சமாயத்தின் ஸ்தாபகராக காணப்பட்டது தொடர்பாக அதனூடாக குறிப்பாக சமூக கெடுதியாக காணப்பட்ட உடன் கட்டை ஏறுதல் தொடர்பான பிரச்சினைய ஒழிப்பதற்கு முன்வைத்த கருத்துக்களும் ஆராயப்படுகிறது.

Filza Waseem (2014), "Sir Sayyid Ahmad Khan and the Identity Formation of Indian Muslims through Education" என்ற ஆய்வில் பிரித்தானிய காலனித்துவத்தின் கைகளில் இருந்து விடுபட்டு அரசியல் பொருளாதார மற்றும் ஒழுக்கவியல் ரீதியாக தம்மையோர் தேசமாக அடையாளப்படுத்திய இந்தியாவின் தென்னாசிய முஸ்லீம்களின் மேம்பாட்டின் மைய வடிவமாக சேர் செய்யித் அஹ்மத் கான் காணப்படுவதை முன்னிலைப்படுத்தியதாக இவ் ஆய்வு அமைகிறது.

அனஸ்.எம்.எஸ்.எம் (2012), "தற்கால இஸ்லாமியச் சிந்தனைகள்" என்ற நூலில் *நவீனத்துவமும் முஸ்லீம் அரசியலும் - சேர் செய்யித் அஹ்மத் கான்* என்ற தலைப்பின் கீழ் இந்திய முஸ்லீம்களின் மேம்பாடு தொடர்பான கருத்துக்களும் அக்காலத்தில் காணப்பட்ட அரசியல் நிலமைகள் தெளிவாக ஆராயப்படுகிறது.

Parwez Nazir,(2001) "Raja Ram Mohan Roy: Social Reform and Empowerment of women" என்ற ஆய்வில் ராஜாராம் மோகன் ராயின் சமூக ரீதியான சீர்திருத்தங்கள் பற்றி ஆராயப்படுவதுடன் குறிப்பாக பெண்களுக்கான வலுவூட்டல் தொடர்பாக கருத்துக்களை சமூக சீர்திருத்தங்களில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக ஆராயப்படுகிறது.

Ansari, M.Farooque A Qadir, (2000) "Educational thought and contribution of Sir Sayyid Ahmad Khan" என்ற ஆய்வில் சேர் செய்யித் அஹ்மத் கானின் கல்வி ரீதியான சிந்தனைகளும் சமய சமூக சீர்திருத்தங்களில் அதன் செல்வாக்கு பற்றியும் ஆராயப்படுகிறது.

Singh, Iqbal. (1958). "Ram Mohan Roy a Biographical inquiry into the making of Modern India" என்ற ஆய்வில் ராஜாராம் மோகன் ரோய் அவருடைய வாழ்க்கை வரலாற்றினை ஆய்வு செய்வதுடன் அது எவ்வாறு நவீன இந்தியாவை வடிவமைப்பதற்கு அடித்தளமாக அமைந்தது என்பதும் இங்கு விளக்கப்படுகிறது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வுக்கு தேவையான தரவுகள் இரண்டாம் நிலைதரவுகள் ஊடாக திரட்டப்பட்டு பண்பளவு ரீதியாக ஆய்வு செய்யப்படுகின்றது.

இவ் ஆய்வானது புத்தாக்க ஆய்வாக அமைகிறது. அதாவது 19ம் நூற்றாண்டில் இந்திய சூழலில் அவர்கள் முன்வைத்த கருத்துக்களும் சிந்தனைகளும் சமகால பிரச்சினைகளையும் இன சமூக மோதல்களையும் தீர்ப்பதற்கு உதவும் விதத்தினை வெளிக் கொணரும் வகையில் எடுக்கப்படும் முயற்சி இவ் ஆய்வினை புத்தாக்க ஆய்வாக முன்நிறுத்துகிறது.

இங்கு ஆய்வு முறையியல்களாக வரலாற்று ஆய்வு, பகுப்பாய்வு, ஒப்பீட்டாய்வு, விபரண ஆய்வு போன்ற முறையியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. ராஜாராம் மோகன் ரோய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கான் ஆகியோர் வழங்கிய பங்களிப்பினை ஆராயும் வகையில் இருவரது சிந்தனையையும் வரலாற்று ரீதியில் ஆராயும் வகையில் வரலாற்று ஆய்வு முறையியலும் இவ் இருவரது சிந்தனைகளையும் சமூக சமய கல்வி ரீதியான சீர்திருத்தங்கள் என்று பகுத்து நோக்கும் வகையில் பகுப்பாய்வு முறையியலும் மற்றும் இவ் இருவரது சிந்தனைகளையும் ஒப்பு

நோக்கும் வகையில் ஒப்பீட்டாய்வு முறையியலும் இக்கருத்துக்களை தெளிவு படுத்துகின்ற வகையில் விபரண முறையியலும் பயன்படுத்தப்படுகிறது.

இங்கு இரண்டாம் நிலைத்தரவாக இவ் இருவரது சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி ஏனையோரால் ஆராயப்பட்ட நூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன அத்தரவுகள் தொடர்பாக ஏலவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள கட்டுரைகள் என்பனவும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

## இந்தியாவினை நவீனப்படுத்துவதில் இராஜாராம் மோகன் ராய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கானின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் - ஓர் ஒப்பீடு.

இந்தியாவினை நவீனத்துவப்படுத்துவதில் இவ் இருவரது சிந்தனைகளும் செயற்பாடுகளும் ஒத்திசைந்த தன்மைகளை வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம். இவ் இரு சிந்தனையாளர்களும் இந்தியா மாறுதலுக்குள்ளாவதையும் அதனால் பண்டைய மரபுகள் சவாலுக்கு உள்ளாவதையும் உணர்ந்தனர். சர்வதேச சட்டங்கள், உறவுகள் என்பன உருவாகியிருந்ததால் இப்பிரச்சினைகளை இவர்கள் தேசிய சவாலாக எடுத்தனர். அவர்கள் தத்தம் சமூகத்திற்காகப் பாடுபட்டாலும் அவர்களது தூர நோக்கு நவீன இந்தியாவாகவே காணப்பட்டது.

- ### கல்வி ரீதியான சீர்திருத்தங்கள்

பாரம்பரிய கல்வி முறையின் நோக்கமாக மதம் சார் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாகவும் அதாவது ஆன்மீக ரீதியான வளர்ச்சிக்கும் அதன் விவாதங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தது. இக் கல்வி முறையானது அன்றாட வாழ்க்கை முறையினை நிறைவேற்றப் பொருத்தமானதாக இருந்ததே தவிர அது அறிவியல் ரீதியாகவும் நாட்டின் நடைமுறைத் தேவைக்கும் இன்றைய நவீன காலத்திற்கும் அக் கல்வி முறையினால் ஈடு கொடுக்க முடியவில்லை.

இராஜாராம் மோகன் ராய் கல்வி ரீதியான சீர்திருத்தத்தின் மூலம் சமூக ரீதியான சீர்திருத்தத்தில் தாக்கம் செலுத்தலாம் என நம்பினார். இந்த வகையில் 1817 Hindu College இனை கல்கத்தாவில் நிறுவினார். 1822ல் மோகன் ரோயின் Anglo Hindu School ஆக இது கண்டு கொள்ளப்பட்டது. நான்கு வருடங்களின் பின்னர் Vedanta College இனை நிறுவுகிறார்[ளை]. இதில் ஓரிறைவாத சிந்தனையை மேற்கத்தேய சிந்தனைகளுடன் ஒப்பு நோக்கினார். அத்துடன் இவர் மேற்கத்தேய கல்வி முறையை இந்திய கல்வி முறைக்கு அறிமுகம் செய்கின்றார். இந்த வகையில் இவரது Vedanta College ஆனது தனது பாடத்திட்டங்களை மேற்கத்தேய மற்றும் இந்திய கல்வி முறையை இணைக்கும் வகையில் வழங்கியுள்ளது.

சேர் செய்யித் அஹ்மத் கானின் கல்வி ரீதியான சீர்திருத்தங்கள் பாரிய எதிர்ப்புகள் மத்தியிலும் இவர் அதனை முன்னெடுத்துச் சென்றார். இந்த வகையில் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியமை முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது. இவர் தன்னுடைய காலப்பகுதியில் ஆங்கிலக் கல்வி கற்பதற்கான வாய்ப்புக் காணப்படவில்லை ஏனெனில் உலமாக்கள் ஆங்கிலப் பாடசாலைகளை "அறியாமையின் கூடாரங்கள்" என கூறியதோடு அக்காலத்தில் ஆங்கிலக் கல்வியினை எதிர்க்கின்ற மனப்பாங்கே காணப்பட்டது. இந்துக்கள் புதிய கல்வி முறைமைக்கு தம்மை விரைவாகத் தயார் செய்து கொண்டிருக்கும் போது முஸ்லீம்கள் புதிய கல்வி முறையை எதிர்த்தனர். 1824 ல் இந்துக்களுக்கு சமஸ்கிருதக் கல்வியை பிரித்தானியர் அறிமுகப்படுத்த ஆரம்பித்த போது இந்துக்கள் ஆங்கிலக் கல்லூரி வேண்டும் என போராடினார்கள். அதே வேளை 1835 ல் முஸ்லீம்களுக்கு ஆங்கிலக் கல்லூரியினை அரசாங்கம் ஆரம்பிக்க அறிவித்த போது 800 உலமாக்கள் எதிர்த்துப் போராடினர். இதனைக் கண்ணுற்ற இவர் 1857 களின் பின்னர் முஸ்லீம்களின் கல்வி மறுமலர்ச்சி பற்றி பேச ஆரம்பித்தார். 1859ல் பிரசுரம் ஒன்றில் சுய

மொழிக் கல்விக் கூடங்களினால் நவீன தேவைகளைப் நிறைவு செய்ய முடியாது என்ற கருத்தினை வெளியிட்டிருந்தார். ஆங்கிலப் பாடசாலைகளை அறிமுகப்படுத்தும் படியும் இதனால் இந்தியர்கள் பயனடைவார்கள் என்ற கருத்தினையும் தனது அறைகூவலாகவும் விடுத்திருந்தார்.

1860 களின் உரையில் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியதோடு சுயமொழிக் கல்வி முறையானது உயர்கல்விக்கு இடமளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார். ஐரோப்பிய அறிவியல் நூல்களை சுயமொழியில் கற்பது பொருந்தாது என்றும் அவ்வாறு கற்றால் அது அறிவியலைச் சீரழிப்பதற்குச் சமமானது என்றும் குறிப்பிட்டார். அத்துடன் முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வியினை ஒதுக்கி வைப்பதற்கான காரணங்களாக, அரசியல் மரபுகள், சமூகப் பழக்க வழக்கங்கள், சமய நம்பிக்கை, வறுமை என்பனவற்றைக் காரணங்களாக் காட்டினார்.

சுதந்திரக் கல்விக்காக அலிகார் பல்கலைக்கழகத்திட்டம் அறிமுகப்படுத்திய போது உலமாக்களின் எதிர்ப்பு நிகழ்ந்தது. இவ் எதிர்ப்புக்களைத் தாண்டியும் 24 வைகாசி 1875 ல் அலிகார் பல்கலைக்கழகத்திட்டம் முகமதன் ஆங்லோ ஓறியன்டல் கல்லூரி (Muhammadan Ahglo Oriental College) என்ற பெயரில் வெளிவந்தது[v]. இதுவே இவரது பிரதானமான கல்வி ரீதியான சீர்திருத்தமாகும். கல்விச் சீர்திருத்தத்தின் பிரதான நோக்கம் முஸ்லீம்கள் தமது எதிர்காலத்தைக் கட்டி எழுப்பவும் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவசியம் என்பதனை வலியுறுத்தியது மட்டுமல்லாமல் அது முழு இந்தியர்களின் நன்மைகக்காவும் காணப்பட்டது எனலாம்.

## ➢ சமய ரீதியான சீர்திருத்தங்கள்

சமய ரீதியான சீர்திருத்தங்களில் இவ் இருவரது சிந்தனைகளும் தத்தம் சமய ரீதியான சீர்திருத்தங்கள் என்பதற்கு அப்பால் சமயங்கள் ரீதியான சகிப்புத்தன்மை என்ற விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையை அவதானிக்க முடிகிறது. அத்துடன் சமயங்களை வெறும் ஆன்மீகத் தேவைகளுக்காக பயன்படுத்தாது அதனை பகுத்தறிவுடன் அணுகுகின்ற பாங்கும் சிறந்த சமய சிந்தனைகளையும் வெளிநாட்டிற்கும் அறியத் தரும் வகையில் மொழிபெயர்ப்புப் பணியிலும் இவர்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் இராஜாராம் மோகன் ராயினுடயை சமய ரீதியான சீர்திருத்தச் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் நோக்கும் போது "ஆண்டவன் ஒருவனே" எனக் கூறி எல்லாச் சமயத்தவர்களிடமும் ஒருமைப்பாடும் சமத்துவமும் நிலவ வேண்டும் என்பதே இவரது நோக்காகக் காணப்பட்டது. ஒரு தெய்வ வழிபாட்டை பரப்ப இவர் பாடுபட்டதுடன் இந்து சமயத்தில் பகுத்தறிவிற்கு ஒவ்வாத செயல்களை ஒழிக்க விரும்பினார்.

எல்லாச் சமயங்களிலுமுள்ள சிறந்த கூறுகளைச் சேர்த்து உருவமில்லாத பரம்பொருளை வணங்குவதற்கென பிரம்ம சமாஜத்தை ஆரம்பித்தார். இதில் உருவங்கள் வைப்பதும் சடங்குகள் செய்வதும் அனுமதிக்கப்படவில்லை. உருவ வழிப்பாட்டுக்கு மறுப்பு ஒன்று என்ற தனது சிந்தனையை எழுத்துருவில் எழுதினார். இதனை அச்சிட்டு இலவசமாக வழங்கினார். அதன்பின் வேதங்களிலும் உபநிடதங்களிலும் தாம் நல்லவை என எண்ணிய பகுதிகளை மொழிப்பெயர்த்து வெளியிட்டார். இவர் உருவ வழிப்பாடு பற்றிக் கி.பி.1819ல் நடைப்பெற்ற சொற்பொழிவில் கலந்துக் கொண்டு வெற்றி பெற்றார்.

மோகன்ராய் எல்லா மதத்திலுமுள்ள மூடக்கருத்துக்களை வெறுத்தாரே யொழிய மதங்களையோ கடவுளையோ வெறுக்கவோ மறுக்கவோ இல்லை. இவர் எல்லா மதத்தையும் ஊன்றிக் கற்று உண்மையைத் தெளிந்தவர். இவர் உலகிலேயே நவீன முறையில் முதன் முதலாக சமய ஒத்துநோக்கு உணர்ச்சியினை உண்டாக்க பாடுபட்டவர் என்று மோனியார் வில்லியம் கூறுகிறார். உலக மனிதாபிமானத்தை ஆத்மீகம், அரசியல் ஆகியவற்றுடன் இணைத்து ஒரு பரந்த "மனித மதத்தைக் கண்டவர் மோகன்ராய் என்று சீல் (Seal) என்பார் குறிப்பிடுகின்றார்.

சேர் செய்யித் அஹ்மத் கானின் சமய ரீதியான சீர்திருத்தங்களை நோக்கும் போது 19ம் நூற்றாண்டு வரை செல்வாக்கு பெற்றிருந்த மரபு வாதச் சமயச் சிந்தனைகளையும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத சமயப் போதனைகளையும் அஹமத் கான் விமர்சித்தார். அறிவு ரீதியான சமய சீர்திருத்தப் பணியினை இவர் ஆரம்பித்து வைத்தார் எனலாம். அதாவது பழமைவாதிகளின் எதிர்ப்பு சமயக் கோட்பாட்டின் அடியாக எழுவதை இனங்கண்ட இவர் சமயத்தில் பகுத்தறிவிற்கு ஒவ்வாத பழமைவாத சிந்தனைகளை விமர்சனத்திற்கு உட்படுத்தியிருந்தார். மார்க்கச் சட்டங்களை அஹமத் கான் மீள்விசாரணைக்கு உட்பட்டுத்தினார்.

அற்புதம் என்ற பதத்தை பொதுவாக அதற்கு அளிக்கப்பட்ட விளக்கத்தில் இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இயற்கை விதி இறைவனால் படைக்கப்பட்டு இறைவனால் வழங்கப்படுகின்ற ஒரு உத்தரவாதமுடையதாகும். இது மீறப்படுகின்ற தேவை உடையதல்ல என்றார். இவர் குர்-ஆனில் கூறப்பட்டுள்ள அற்புதங்களை மறுக்கவில்லை. அத்துடன் அது இயற்கை விதியை மீறிய செயல் என்பதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இறைவனுக்கு சமமாக மனிதனை வைத்து வணங்குகின்ற இணைவைத்தல் முறையினை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த வகையில் பகுத்தறிவு ரீதியாக சமயம் என்ற எண்ணக்கருவினைப் புரிந்து கொள்வதன் மூலமே முன்னேற்றம் அடையலாம் என்ற சிந்தனையை தெளிவுபடுத்துகிறார்.

- **சமூக ரீதியான சீர்திருத்த சிந்தனைகள்**

இராஜாராம் மோகன் ராய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கானின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் பிரதானமாக இந்திய சமூகத்தினை நவீனப்படுத்துவதினையே பிரதானமாகக் கொண்டு காணப்படுகிறது. இவரது சமூக ரீதியான சீர்திருத்தமானது பெரும்பாலும் மூட நம்பிக்கைகளிற்கும் பழமை வாதத்திற்கும் எதிரானதாகவே காணப்படுகிறது.

சட்டம் மற்றும் ஒழுங்குகளிற்குப் பதிலாக பொதுமக்களின் அபிப்பிராயங்களின் உருவாக்கம் அவசியம் என்றும் அதன் அவசியத்தன்மை ராஜாராம் மோகன் ராயினால் உணரப்பட்டது போல யாராலும் உணரப்படவில்லை. இவரால் சிறிய துண்டுப்பிரதி, விளம்பரச்சிற்றேடு என்பவற்றை எழுதி சமூகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற மனிதாபிமானம் அற்ற செயற்பாடுகளிற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக போராடினார்[எை].

இந்த வகையில் ராஜாராம் மோகன் ராயினுடைய சமூக ரீதியான சீர்திருத்தச் செயற்பாடுகளில் சாதிப்பாகுபாட்டிற்கு எதிரான விமர்சனம் முக்கியமானதாக காணப்படுகிறது. சாதி என்ற பெயரில் உயர்ந்தவர்கள் , தாழ்ந்தவர்கள் என்ற வேற்றுமை தலை தூக்கியிருந்தது. தீண்டதகாதவர்கள் என ஒரு சிலரை ஒதுக்கி வைத்த போது அவர்கள் மன ரீதியாக கொந்தளித்த போது அந்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி மற்ற மதத்தினர் இந்துக்களை தமது மதத்திற்கு திருப்பிக்கொண்டனர்[எளை]. பெரும்பாலானோர் கிறிஸ்தவ மதத்திற்கும் சிலர் இஸ்லாம் மதத்திற்கும் மாற ஆரம்பித்தனர் இதனால் இந்துக்களிடம் ஒருமைப்பாடு சீர்குலைய கிறிஸ்தவ மதத்தின் ஆதிக்கம் பெருகியது. செல்வமும் செல்வாக்கும் பெற்றவர் தம் பாவம் தீர கோயில்களையும் சத்திரங்களையும் கட்டினர். அக் கோயில்களில் வேதியர்களும் அர்ச்சகர்களும் ஆதிக்கம் செலுத்தினர். கோயில்களுக்கு சென்று கடவுளை வணங்க குறிப்பிட்ட சாதியினருக்கே முதலிடம் அளிக்கப்பட்டது. சத்திரங்களையும் கோயில்களையும் சாதுக்களும் யோகிகளும் தங்கும் விடுதிகளாகக் கொண்டு காலத்தைக் கழித்தனர். இதனால் சாதிப் பாகுபாடானது சமய ரீதியான சீர்குலைவிற்கு வழிகோலும் என்பதனை உணர்ந்து தீண்டத்தகாதவர்களின் முன்னேற்றத்திற்காக முதன் முதலில் பாடுபட்ட இந்தியராக ராஜாராம் மோகன் ராய் காணப்படுகிறார்.

கணவன் இறந்ததும் மனைவி கணவனுடன் தீப்பாய்ந்து மாளும் வழக்கம் இந்தியாவில் பன்னெடுங்காலந் தொட்டே இருந்து வந்தது. இவ்வாறு உடன்கட்டை ஏறும்படி இந்து சமயத்தின்

எந்த மறையும் சமயவாதியும் கூறியதில்லை. ஆயினும் இப்பழக்கம் எப்படியோ இந்தியரிடையே நிலைத்து இருந்தது. இதனை இந்தியாவை ஆண்ட ஆப்கானிய சுல்தான்களும் முகலாய மன்னர்களும் போர்த்துக்கீசிய ஆளுநர் அல்புகர்க்கும் மற்றவர்களும் தடுக்க முற்பட்டுத் தோற்றனர். ஆனால் இராஜாராம் மோகன்ராய் இதில் வெற்றியைக் கண்டவர். ஆங்கிலத் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங்க் (1828-1835) என்பவருடன் உறுதுணையாக நின்று இதனை எதிர்த்து உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்கக்கூடாதெனப் போராடிய இந்துக்களைச் சாடியவர் மோகன்ராய் ஆவார்.

1818ல் வழக்கறிஞருக்கும் எதிராக எரிக்கப்பட்ட விதவையின் வாழ்க்கை பற்றி வெளிப்படுத்துகிறார். இது ஒரு வடிவமைக்கப்பட்ட உரையாடல் ஆகிறது. இங்கு எதிர்வாதியின் குரலாக ராஜாராம் மோகன் ராயினுடைய குரல் காணப்படுகிறது. 1820ல் உடன் கட்டை ஏறுதல் தொடர்பாக பொது மக்களின் எண்ணங்களிற்காக சிறிய துண்டுப்பிரதி, விளம்பரச்சிற்றேடு என்பன வழங்கப்படுகிறது. எழுத்தியலில் மட்டுமன்றி உடன் கட்டை ஏறும் முறையினை ஒழிப்பதற்காக தனக்கு காணப்படுகின்ற வெளி நெருக்குதல்களையும் கருத்தில் கொள்ளாது இதற்கு எதிராகப் போராடுகிறார்.

இவ்வாறு மோகன்ராய் உடன் கட்டை ஏறுதலுக்கு எதிராக தன் கருத்தை ஏற்பவர்களை ஒன்று திரட்டிக்கொண்டிருந்தபோதே 4-12-1829 இல் வில்லியம் பெண்டிங்க் பிரபுவால் சாதித்திட்டம் சட்டவிரோதமாக்கப்பட்டது. எங்களது சமய, சமூக வழக்கங்களில் கைவைக்காதீர் எனக் கூறி எழுந்த எண்ணிலடங்கா இந்துக்கள் இச்சட்டத்தை எதிர்த்து இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் முறையிட்டனர். அச்சமயத்தில் மோகன்ராய் தன் கட்சிக்காரர்களின் கையொப்பங்களுடன் அதே சபையில் சட்டத்தை ஆதரித்தும் அச்சட்டத்தை செயல்படுத்துமாறும் முறையிட்டார். சட்டம் நிறைவேற்றப்பட்டு உடன்கட்டை ஏறுபவர்களும், அதற்கு உடந்தையாய் இருப்பவர்களும் கொலை குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனையைப் பெறும்படி செய்தது. சீற்றமடைந்த சிலர் மோகன்ராயை கொல்லவும் பலமுறை முயன்றனர்.

இவரால் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தச் சிந்தனைகளில் பெண் குழந்தைக் கொலைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சிந்தனைகள் முக்கியமானதாகக் காணப்படுகின்றன. மோகன்ராய் போன்றவர்களின் சீர்திருத்தக் கிளர்ச்சிகளால் பெண் குழந்தை கொலைத் தடுப்புச் சட்டம் 1795 இல் வங்காளத்தில் கொண்டு வரப்பட்டது. இதற்கு பின்னும் மறைமுகமாகப் பெண் குழந்தைகளை நஞ்சிட்டு கொல்லுதல், பட்டினிபோட்டுக் கொல்லுதல், முதலியன நடந்தன. மோகன்ராய் போன்றோரின் ஒத்துழைப்பால் அரசாங்கம் இதை அறவே ஒழித்து, பெண் குழந்தைகளை காப்பாற்றியது.

மற்றும் பலதார மணம், விதவை மணம், சிறுவர்கள் மணம் என்பவற்றிற்கு எதிரான சிந்தனைகளினையும் அதனை ஒழிப்பதற்காகவும் பாடுபட்டார். ஓர் ஆண் பல பெண்களை மணத்தலும், சிறுமிகளுக்கு மணவினை செய்து வைத்தலும், விதவைகளுக்கு மறுமணம் செய்யாமையும் தொன்றுதொட்டே இந்து சமூகத்தில் காணப்பட்ட குறைகளாகும். இம்முறைகளை ராஜா ராம் மோகன் ராய் கடுமையாக எதிர்க்கலானார்.

ஒரு வயிற்றில் பிறக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்து, சுகம், வாழ்வுமுறை, பண்பாடு, முதலிய யாவற்றிலும் சம உரிமை உண்டு என்பதனை வலியுறுத்தி, இவற்றிற்குச் சான்றாக பல மேற்கோள்களை காட்டி 1838 இல் ஒரு நூலை வெளியிட்டார்.

மனைவி இறந்ததும் கணவன் மறுத்தாரம் கொள்வதை அனுமதிக்கும் சமுதாயமும் சாத்திரங்களும் கணவன் இறந்ததும் மனைவிக்கு மட்டும் ஏன் மறுமணத்தை அனுமதிக்கவில்லை? இதில் மனிதாபிமானமிருக்கிறதா என்று கேட்டு, விதவைகளின் மறுமணத்திற்கு மோகன்ராய் வழி கோலினார். பெண்களின் உயர்வுக்காக முன்வைக்கப்பட்ட சிந்தனைகளினால் இவரை 19ம் நூற்றாண்டின் பெண்நிலை வாதியான ஆண் என அழைத்தனர்.

சேர் செய்யித் அஹ்மத் கானின் சிந்தனைகளை முன்வைக்கும் போது மோகன் ராயினைப் போல பெண்கள் தொடர்பாகவும் பலதார மணங்கள் தொடர்பான பிரச்சினைகள் இவருக்கு பெரிதளவில் பிரச்சினையாக இருக்கவில்லை எனலாம் அதாவது இஸ்லாமிய கலாச்சாரத்தில் பெண்களிற்கு மறுவாழ்வு அளிப்பதற்காக பலதார மணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டமையால் மோகன் ராய் போல சமூக ரீதியான சீர்திருத்தத்திற்கு பெரியளவில் எதிர்ப்புக்களை எதிர்கொள்ளாத போதிலும் சமூக ரீதியான மாற்றங்கள் அடிமட்டத்தில் இருந்து உருவாக்கப்பட வேண்டிய தேவையை இவர் வலியுறுத்தினார்.

19ம் நூற்றாண்டின் மத்தியில் மதரஸாக்கள் "ஸரீஆ"வைப் பாதுகாப்பதிலும் இஸ்லாமியப் பிரச்சாரத்திலும் அதிக கவனம் செலுத்தினர். மாற்றப்படாத பாடத்திட்டத்தினால் சுதந்திர சிந்தனை, அறிவு வளர்ச்சியும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. புதிய கருத்துக்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவற்றைப் பேச முற்படுவது சமூக, சமய நிராகரிப்பு என்ற நிலை காணப்பட்டது. அக் கால சூழலுக்கு வேண்டிய சமூக, அரசியல் பிரச்சினை தொடர்பாக மதரஸாக்கள் போதிக்க முன்வரவில்லை. இவர்களிற்கு குத்பாவை ஓதுவது, ஈத் பெருநாளில் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவுதல், பட்டாடை அணிதல் போன்ற விவகாரங்கள் தொடர்பாக விவாதித்து வந்தார்கள்.

காலம் கடந்த கல்வி முறைகளும், மாறாத மரபுவாதத்திற்கு எதிராக அஹ்மத் கான் போராடினார். முஸ்லிம்கள் மேற்கத்திய அமைப்பில் பல்கலைக்கழகத்தை பெற முதற்காரணமாக இருந்தவர். ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமையை அவர் வலியுறுத்தியதோடு பல்லின மக்கள் வாழும் ஐக்கிய இந்திய தேசம் என்ற கோட்பாட்டை மெய்யாகவே கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அனைவருமே இந்திய தேசத்தவர்கள். இந்த ஐக்கிய எண்ணமே இந்தியாவின் சக்தி என்று அவர் குறிப்பிட்டார். உருது மொழியை இந்து முஸ்லீம்களை இணைக்கும் பாலமாகக் கருதினார்.

இவ் இருவரும் சமூக ரீதியான சிந்தனைகளினை நோக்கும் போது பொதுவாக சமூகத்தில் காணப்பட்ட மூடப் பழக்க வழக்கங்களைக் களைவதன் மூலம் பகுத்தறிவுள்ள சமூகத்தினை உருவாக்குவதற்கு போராடினார்கள்.

## ராஜாராம் மோகன் ராய் மற்றும் சேர் செய்யித் அஹ்மத் கானின் சிந்தனைகளும் செயற்பாடுகளும் நவீன இந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்படுத்திய தாக்கங்களும் சமகாலப் பிரச்சினைகளுக்கான அதன் பொருத்தப்பாடுகளும்.

19ம் நூற்றாண்டில் பல்வேறான அரசியல் சூழ்நிலைகளால் பாரம்பரிய இந்திய சிந்தனை மரபானது நிலை தளர்ந்து போகின்ற தன்மையில் பாரம்பரிய இந்திய சிந்தனைகளை பாதுகாக்கவும் நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் சமய, சமூக, கல்வி ரீதியான மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டிக் காணப்பட்டது.

இவர்கள் இருவரும் தனித்தனியே தமது சமுதாயத்திற்காக பாடுபட்டாலும் மற்றைய சமுதாயத்தில் எந்த வித பாதிப்பினையும் எந்த வித இடையூறுகளையும் ஏற்படுத்தவில்லை எனலாம். குறிப்பாக தமது சமுதாயத்தின் வழி இந்திய தேசத்தின் நவீனத்துவத்தினையே குறிக்கோளாகக் கொண்டனர்.

- **இன மத ரீதியான ஒற்றுமையை வழியுறுத்துதல்**

இராஜராம் மோகன் ராயினை எடுத்து நோக்குவோமாயின் இவரது உருவ வழிபாட்டிற்கு எதிரான மறுப்பானது இன்றைய சமய ரீதியான சகிப்புத்தன்மைக்கும் இன ரீதியான முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கும் அடித்தளமாகக் காணப்படுகின்றமையை நோக்க முடிகின்றது. அதாவது இனப்பிரச்சினையானது மதங்களை அடிப்படையாகக் கொண்டே எழுகிறது எனலாம். இந்த வகையில் மதங்களைப் பிரதிபலிப்பனவாக ஆலயங்களும் ஆலயங்களினுள் வைக்கப்படும்

உருவங்களும் அடிப்படையாக அமைகின்ற ஒன்றாகும். இராஜராம் மோகன் ராய் கூறியது போல ஒரே கடவுள் கொள்கையை நிறுவும் பொருட்டு இன மத மோதல்களுக்கான சாத்தியம் குறைக்கப்படும் அத்துடன் இவ் இன மத மோதல்களின் தாக்கத்தினால் ஏற்படுகின்ற வறுமை போன்றனவும் குறைக்கப்படும்.

- **பெண்களுக்கு எதிரான வன்முறையினை ஒழித்தல்**

இராஜராம் மோகன் ராயினால் முன்வைக்கப்பட்ட உடன்கட்டை ஏறுதலுக்கு எதிரான சிந்தனையானது அதனை ஓர் சட்ட ரீதியான குற்றமாகக் கொண்டு வருவதற்கும் இன்று அந் நடைமுறை இல்லாது ஒழிந்து போவதற்கும் அடித்தளமாகியது எனலாம். இருப்பினும் முற்றாக இந் நடைமுறை அழிந்து விட்டது எனக் கூறுவதற்கும் இல்லை இருப்பினும் பாரம்பரியமாக இந்திய தேசத்தில் ஓர் பண்பாடாக இருந்த நடைமுறை ஒழிக்கப்பட்டமையானது பெண்களுக்கெதிரான வன்முறைக்கு எதிரான குரலாக காணப்படுகின்றது.

- **சிறுவர் உரிமையினை பாதுகாத்தல்**

மோகன் ராயினால் முன்வைக்கப்பட்ட பால்ய விவாகத்திற்கு எதிரான சிந்தனைகளும் இன்று நடைமுறைச் சட்டங்கள் ஆக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இன்று பால்ய விவாகம் என்பது சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்படாத ஒன்றாகக் காணப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஐக்கிய நாடுகள் சபையினால் 1989ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் 18 வயதிற்கு குறைந்தவர்கள் திருமணம் செய்தால் அது சட்ட ரீதியில் குற்றமாகக் கருதுவதோடு தண்டனையும் வழங்கப்படுகின்றது[எைைை].

- **கல்வி உரிமையினை நிலைநாட்டுதல்**

மோகன் ராயினது கல்வி ரீதியான பங்களிப்புகளில் இந்துக் கல்லூரியினை ஆரம்பித்து வைத்தது போல இலங்கையிலும் சைவப் பிரகாச வித்தியாலயங்களை ஆறுமுக நாவலர் ஆரம்பித்து வைத்தார்[ைஒ]. அதுமட்டுமல்லாது ஆங்கிலக் கல்வியின் அவசியத்தையும் மேற்கத்தேய கல்வி முறை பற்றிய சிந்தனைகளின் பிரதிபலிப்பே இலங்கையிலும் ஆறுமுக நாவலர் இந்து மாணவர்களுக்கான ஆங்கிலப் பாடசாலை உருவாகுவதற்கு அடித்தளமாகியது எனலாம். 1871ல் வண்ணார்ப்பண்ணையில் ஜோன் கில்னர் நடத்திய வெசுலியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணவர்கள் திருநீறு அணிந்து சென்றமையால் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அதனால் அப்பிள்ளைகளின் நலன் கருதி வண்ணார் பண்ணையில் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார். இவ்வாறாக இராஜராம் மோகன் ராயின் சிந்தனைகள் இந்தியாவினை மட்டுமல்ல இலங்கை போன்ற நாடுகளின் வளர்ச்சிக்கும் அடித்தளமாகியது எனலாம்.

அஹ்மத் கானின் கல்வி ரீதியான சீர்திருத்தங்களில் ஆங்கிலக் கல்வியினை வலியுறுத்தியது மட்டுமல்லாது ஐரோப்பிய முறையில் அமைந்த பல்கலைக்கழகத்தினையும் நிறுவியமை கல்வி ரீதியாக மக்களை பழமைவாதத்தில் இருந்து கட்டியெழுப்பும் முயற்சியே ஆகும். இலங்கையில் சித்திலெப்பை போன்றவர்கள் முஸ்லீம் மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடசாலையை 1884 ல் கொழும்பில் உள்ள சோனகத் தெருவில் ஆங்கிலே முகமதியா பாடசாலையை நிறுவியமை மாணவர்களுக்கான கல்வி ரீதியான முன்னேற்றத்திற்கு அடித்தளமாகியது[ஒ].

- **அரசியலில் சமத்துவத்தினை பேணுதல்**

சேர் செய்யித் அஹ்மத் கானின் இன ரீதியாக எந்தவித பாகுபாட்டினையும் நோக்காது பெரும்பான்மை, சிறுபான்மை தொடர்பான சிந்தனைகள் பற்றி இவர் கருத்தில் கொண்டார். அதாவது பெரும்பான்மையினரின் ஆட்சியினால் சிறுபான்மையினர் பாதிப்பிற்குட்படுவர் என்றும் அதனால் முஸ்லீம்கள் அரசியலில் ஈடுபட வேண்டுமாயின் நகர மன்றம் மற்றும் சட்ட மன்றம்

**Proceedings of 9th International Symposium (Full Paper)**, South Eastern University of Sri Lanka, Oluvil. 27th – 28th November 2019, *ISBN: 978-955-627-189-8*

என்பவற்றில் முஸ்லீம்களிற்கும் சம உரிமை தர வேண்டும் என்றார். இந்த வகையில் இதன் எதிரொலிப்பு இலங்கையிலும் சித்திலெப்பையின் வழியாக வெளிப்பட்டதோடு 1889 ல் இலங்கை முஸ்லீம்கள் இருவர் சட்ட நிர்ணய சபையில் உறுப்பினராக இடம் பெற்றனர். இந்த வகையில் இனப் பாகுபாடற்ற ஒரு சமத்துவ நாட்டினைக் கட்டியெழுப்ப இவரது சிந்தனைகள் அடித்தளமாகின்றன.

- **மூட நம்பிக்கைகளை கலைதல்**

சமய ரீதியான சீர்திருந்தங்களில் அஹ்மத் கான் பகுத்தறிவுக்கு ஒவ்வாத சிந்தனைகளை சமயத்தில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்றார். இலங்கையிலும் சித்திலெப்பை போன்றவர்கள் மூட நம்பிக்கைகள் சமயத்திற்குப் புறம்பானது என்று கருதி அதனை சமயத்தில் இருந்து நீக்க முயன்றனர். உதாரணமாக, நோய் வந்தால் அதற்கு மருந்தினை எடுத்துக் கொள்ளாது மந்திரித்தல், நூல் கட்டுதல், பழம் தறித்தல் போன்ற செயற்பாடுகளை இவர் கண்டித்தார்.

**முடிவுரை.**

இரு சிந்தனையாளர்களினது சிந்தனைகளும் செயற்பாடுகளும் பகுத்தறிவுள்ள சமுதாயத்தை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு நவீன இந்தியா என்ற எண்ணக்கருவினை இலட்சியமாகக் கொண்டு முன்னெடுத்த செயற்பாடுகளாக் காணப்படுகின்றன. இவர்களது சிந்தனைகளும் செயற்பாடுகளும் எவ்வளவு தூரம் வெற்றியை ஈட்டிக் கொண்டது என்பதற்கு அப்பால் இன்றைய காலகட்டத்தில் இச்சிந்தனைகளின் செல்வாக்கு காலத்தின் தேவையாகவும் நடைமுறையாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.